சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்
MCOP.No. 356 / 2022

ம.சா.2. கண்ணன் 12.06.2024

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:

நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. மனுதாரர் அழைத்ததன் பேரில் தான் நான் இந்த மனுவில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். மனுதாரர் என்னை போன் மூலமாக அழைத்தார். நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அவரது அலைபேசி எனக்கு ஞாபகமில்லை. இந்த விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் சிவசங்கர் மனைவி புகார் கொடுத்தார். அவர் என்ன புகார் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நான் புகாரை பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்த போது சிவசங்கர் விபத்து ஏற்பட்ட இடத்தில் தலைகவசம் அணிந்திருந்தார் என்று நான் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். புகாரிலோ முதல் தகவல் அறிக்கையிலோ மற்றும் இறுதி அறிக்கையிலோ விபத்தில் காயம் அடைந்த சிவசங்கர் தலைகவசம் அணிந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் காலையில் விருப்பாட்சியில் கிளம்பி ஒட்டன்சத்திரம் காலை 08.45 மணிக்கு இருசக்கர வாகனத்தில் வந்து சேர்ந்தேன். நான் விருப்பாட்சியில் இருந்து இருசக்கர வாகனத்தில் ஒட்டன்சத்திரம் வந்தேன் என்று போலீஸ் விசாரணையிலும் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையிலும் சொன்னேனா என்றால் இல்லை. விபத்து நடைபெற்றவுடன் உடனடியாக ஒட்டன்சத்திரத்தில் உள்ள கிறிஸ்துவ ஐக்கிய மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சேர்த்தேன். அங்கு நான் கையெழுத்து எதுவும் செய்யவில்லை. விபத்து நடைபெற்ற இடம் போக்குவரத்து அதிகம் உள்ள இடம் என்றால் அன்றையதினம் காலை தினம் என்பதால் போக்குவரத்து அதிகமாக இல்லை. போலீசார் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றும் எத்தனை மணிக்கு பார்த்தார்கள் என்றால் 09.15 மணி முதல் 09.45 மணி வரை இருக்கும். என்னிடம் 09.30 மணிக்கு போலீசார் வாக்குமூலம் பெற்றார்கள். ரேவதியிடம் போலீசார் எங்கு

வைத்து எப்போது வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. போலீசாருக்கு தகவலே 10.30 மணிக்கு கிடைத்ததாக ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள நிலையில் 09.30 மணிக்கு என்னிடம் போலீசார் இந்த வழக்கு சம்பவம் குறித்து வாக்குமூலம் பெற்றது தவறு என்றும் நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் சம்பவத்தையே நேரடியாக பார்க்கவில்லை என்றும் மனுதாரர் எனக்கு வேண்டப்பட்ட நபர் என்பதால் அவர் அழைத்து வந்ததன் பேரில் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சொன்னால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2024.06.12 15:36:04 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்